## பாடசாலைக்குத் திரும்புதல் குறித்த விக்டோரிய மாநிலத்தின் திட்டம்

| அத்தியாவசிய நடவடிக்கைகள் | 1: P-2 மற்றும் சீனியர் செகண்டரி மாணவ-மாணவியர் பாடசாலையில் அளிக்கப்படும் கல்விக்குத் திரும்புவார்கள் | 2: இரண்டு வாரங்களுக்குப் பிறகு அனைத்து மாணவ-மாணவியரும் பாடசாலையில் அளிக்கப்படும் கல்விக்குத் திரும்புவார்கள் | சுகாதார அறிவுரையைத் தொடர்ந்து வழமையானப் பாடசாலை நடவடிக்கைகள் துவங்கும் |
|---|---|---|---|
| • **சுத்திகரிப்பு**<br><br>கழிவறைகள் மற்றும் கதவின் கைப்பிடிகள் போன்ற அடிக்கடிக் கை படும் பரப்புகளை நாள் நெடுக சுத்தம் செய்வது உள்ளடங்க, அதியுயர் சுத்திகரிப்பு நடவடிக்கைகளை அமல்படுத்ததுவதில் பாடசாலைகளுக்கு உதவி அளிக்கப்படும்.<br><br>• **உடல்ரீதி விலகல்**<br><br>உடல்ரீதி விலகலை நடைமுறைப்படுத்துவதில் பாடசாலை ஊழியர்களுக்கு உதவியளிக்கப்படும், ஆனால் பாடசாலைச் சூழல்களில் | **(Prep – 2) மற்றும் சீனியர் செகண்டரி (Year 11 and 12) மாணவ-மாணவியர்**<br><br>‘Prep’ முதல் ‘தரம் 2’ வரை உள்ள மாணவ-மாணவியரும், ஆண்டு 11 மற்றும் 12-இல் படிக்கும் மாணவ-மாணவியரும் பாடசாலையில் இடம்பெறும் கல்விக்கு முதலில் திரும்புவார்கள். தற்போது நடைபெற்றுவரும் தூரக் கல்வித் திட்டம் இந்த வகுப்புகளுக்குத் தொடராது.<br><br>**‘தரம் 3’ முதல் ‘ஆண்டு 10’ வரையுள்ள மாணவ-மாணவியர்**<br><br>வீட்டிலிருந்து படிக்கும் வசதியுள்ள ‘தரம் 3’ முதல் ‘ஆண்டு 10’ வரையுள்ள மாணவ-மாணவியர் கட்டாயம் வீட்டிலிருந்து படிப்பதைத் தொடரவேண்டும். தொலைவிலிருந்து படிப்பதற்கான உதவி இந்த மாணவ-மாணவியருக்கு அவர்களுடைய பாடசாலையினால் தொடர்ந்து அளிக்கப்படும். | **அனைத்து மாணவ-மாணவியரும் பாடசாலையில் இடம்பெறும் கல்விக்குத் திரும்புவார்கள்**<br><br>அனைத்து ஆண்டுகளுக்கான வகுப்புகளிலும் படிக்கும் மாணவ-மாணவியர் பாடசாலையில் அளிக்கப்படும் கல்விக்குத் திரும்புவார்கள்.<br><br>தற்போதையப் பயணக் கட்டுப்பாடுகள் நீக்கப்படும் வரை, முகாம்கள், வெளிச்சுற்றுலாக்கள், உட்சுற்றுலாக்கள் போன்ற நடவடிக்கைகள் அளிக்கப்படமாட்டாது. | பயணக் கட்டுப்பாடுகள் நீக்கப்படுவதற்கு ஏற்ப, விளையாட்டுகள், முகாம்கள், மற்றும் வெளிச்சுற்றுலாக்கள் போன்ற வழமையான பாடசாலை நடவடிக்கைகள் மீண்டும் துவங்கும். |

மாணவர்களுக்கிடையே உடல்ரீதி விலகல் அவசியமானது என்று கருதப்படாது.

- **சுகாதாரப் பழக்கவழக்கங்கள்**

ஊழியர்கள் மற்றும் மாணவ-மாணவியரிடையே அடிக்கடிக் கைகளைக் கழுவும் பழக்கம் ஊக்குவிக்கப்படும், மற்றும் தண்ணீரும் சோப்பும் கிடைக்காதபோது ‘ஆல்கொஹால்’-ஐ அடிப்படையாகக் கொண்ட கைச் சுத்திகரிப்பான் பாவிக்கப்படும்.

- **சுகாதாரம்**

ஊழியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவ-மாணவியர் உள்ளடங்க, சுகவீனமாய் இருப்பதாக நினைக்கும் எவரும் பாடசாலைக்கு வராமல் இருக்கவேண்டும்.

வீட்டிலிருந்து படிக்க இயலாத மாணவ-மாணவியர் அவர்களது பாடசாலையில் அளிக்கப்படும் மேற்பார்வையுடன் கூடிய கல்வித் திட்டத்தினைத் தொடர்ந்து பெறலாம்.

### பாடசாலை ஊழியர்கள்

‘முதல் நிலை’-யின்போது அனைத்துப் பாடசாலை ஊழியர்களும் பாடசாலைக்கு வரவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றனர்.

பாடசாலைகள் மற்றும் ‘தொழிலாளர் உதவித் திட்டம்’ (Employee Assistance Program) ஆகியவற்றின் ஊடாக, அவர்களது உடல் நலனைப் பராமரிப்பதற்கான உதவி பாடசாலை ஊழியர்களுக்கு அளிக்கப்படும்.

### பெற்றோர்கள்

பிள்ளைகளைப் பாடசாலையில் இறக்கிவிடல் மற்றும் அங்கிருந்து ஏற்றிச் செல்லல் ஆகியன குறித்த நெறிமுறைகளைப் பற்றிப் பாடசாலைகளால் அளிக்கப்படும் அறிவுரையைப் பெற்றோர்கள் பின்பற்ற வேண்டும்.

தூரக் கல்வித் திட்டத்தைப் பாடசாலைகள் இனி அளிக்காது.

### பாடசாலை ஊழியர்கள்

பாடசாலைக்கு வருவதை அனைத்து ஊழியர்களும் தொடர்வர்.

பாடசாலைகள் மற்றும் ‘தொழிலாளர் உதவித் திட்டம்’ ஆகியவற்றின் ஊடாக, அவர்களது உடல் நலனைப் பராமரிப்பதற்கான உதவி பாடசாலை ஊழியர்களுக்குத் தொடர்ந்து அளிக்கப்படும்.

### பெற்றோர்கள்

பிள்ளைகளைப் பாடசாலையில் இறக்கிவிடல் மற்றும் அங்கிருந்து ஏற்றிச் செல்லல் ஆகியன குறித்த நெறிமுறைகளைப் பற்றிப் பாடசாலைகளால் அளிக்கப்படும் அறிவுரையைப் பெற்றோர்கள் பின்பற்ற வேண்டும்.